செய்தி வெளியீடு எண்: 422 நாள்: 12.07.2019

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்
## யோகா மற்றும் இயற்கை மருத்துவம்

2019–20–ஆம் கல்வியாண்டில், தமிழகத்திலுள்ள அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் **5 ½ ஆண்டு பி.என்.ஒய்.எஸ். [ B.N.Y.S.] மருத்துவ பட்டப் படிப்பிற்கான** மாணவர் சேர்க்கை, **மேனிலைப் பள்ளி தேர்வில் அறிவியல் [ இயற்பியல், வேதியியல் (ம) உயிரியல் அல்லது தாவரவியல் (ம) விலங்கியல் ]** பாடங்களில் எடுத்த **கூட்டு மதிப்பெண் அடிப்படையிலேயே நடைபெறும். ஒரு அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியும்** ( கலந்தாய்விற்கு உள்ள இருக்கைகள் 60 ), **ஏழு சுயநிதி சிறுபான்மையினர் அற்ற யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளும்** [ அரசு ஒதுக்கீட்டிற்கு ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகள் 358 (65%) மற்றும் நிர்வாகத்தினர் ஒதுக்கீட்டிற்குள்ள இருக்கைகள் [ 192 ( 35%) ] உள்ளன. ( இங்கு கொடுக்கப்பட்டுள்ள இருக்கைகளின் விவரம் தற்காலிகமானது. சென்னை–32, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் 2019–'20–ம் கல்வியாண்டிற்கான அனுமதிக்கப்பட்ட இருக்கைகள் தொடர்பான ஆணைகளுக்கு ஏற்ப மாறக்கூடியது ).

விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை கீழ்க்காணும் அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரி முதல்வர்களிடமிருந்து **19.07.2019 அன்று வரை** அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் **காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை "இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி, சென்னை–106"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ.500/–க்கான சென்னையில் மாற்றத்தக்க, **கேட்பு வரைவோலையை** செலுத்தி பெற்றுக் கொள்ளலா**ம். பட்டியல் இனம் / பட்டியல் இனம் ( அருந்ததியினர் ) / பழங்குடி இனத்தை** சார்ந்த மாணவர்களுக்கு மேற்படி விண்ணப்பப் படிவத்திற்கான தொகை செலுத்துவதிலிருந்து **விலக்கு அளிக்கப்படுகின்றது.** மேலும் இவ்விண்ணப்பதாரர்கள் தங்களது சுயசான்றொப்பமிட்ட சாதி சான்றிதழின் நகல் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழின் நகல்களை சமர்ப்பித்து விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை பெற்றுக் கொள்ளலாம்.

**1. அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, சென்னை–106.**
**2.அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.**
**3.அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.**
**4.அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம்.**

மேலும் இத்துறையின் வலைதளமான **www.tnhealth.org.-**லிருந்து தகவல் தொகுப்பேடு மற்றும் விண்ணப்பத்தினை மேற்குறிப்பிட்ட விண்ணப்ப விநியோக காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**அனைத்து தேவையான இணைப்புகளுடன் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை கீழ்க்காணும் அலுவலகத்தில் சமர்ப்பிக்க ( நேரிலோ அல்லது எவ்வகை தபால் சேவை மூலமாகவோ வந்து சேர வேண்டிய ) கடைசி நாள் 22.07.2019 மாலை 5.30 மணி வரை ஆகும்.**

தேர்வுக் குழு,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை,
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம்,
அரும்பாக்கம், சென்னை–106.

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**